செ.வெ.எண். 69 நாள்: 23.11.2019

**360 நபர்களுக்கு தலா ரூ. 4 ஆயிரம் மதிப்புள்ள தென்னை மரம் ஏறும் கருவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் (22.11.2019) வழங்கினார்.**

கிருஷ்ணகிரி வேளாண் அறிவியியல் மையம் மற்றும் தேசிய தேங்காய் வளர்ச்சி வாரியம் சார்பாக 360 நபர்களுக்கு தலா ரூ. 4 ஆயிரம் மதிப்பில் ரூ.14 லட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் தென்னை மரம் ஏறும் கருவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் (22.11.2019) வழங்கினார்.

**பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கும் போது:**

தேசிய தென்னை வளர்ச்சி வாரியம் சார்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 360- நபர்களுக்கு தலா ரூ. 4- ஆயிரம் மதிப்பிலான தென்னை மரம் ஏறும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. இக்கருவியை பெற்றவர்களுக்கு கிருஷ்ணகிரி வேளாண்மை அறிவியியல் மையத்தில் 6 நாட்கள் தங்க வைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டது. பயிற்சியாளர்களுக்கு இதன் மூலம் தென்னை சாகுபடி, தொழிற்நுட்பம், ரக தேர்வு, உரம் மேலாண்மை, பூச்சி மேலாண்மை, நோய் மேலாண்மை, மதிப்பு கூட்டுதல் உள்ளிட்ட தொழிற் நுட்ப பயிற்சிகள் பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது.

தென்னை மரம் ஏறும் கருவியானது தேசிய தென்னை வளர்ச்சி வாரியம் சார்பாக கேரளா மாநிலத்தில் பயன்படுத்தும் (மாதிரி) கருவியை பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. நமது மாவட்டத்தில் 360 பயனாளிகளில் 40- பயனாளிகள் மகளீர் ஆவார்கள். 18- வயது முதல் 40 வயது உள்ள ஆண்கள் பெண்கள் இருபாலரும் ஆர்வமுள்ளவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகிறது. மேலும் பயிற்சி பெறுபவர்களுக்கு ரூ. 2- லட்சம் மதிப்பில் காப்பீடு செய்யப்படுகிறது. தலா ரூ. 4 ஆயிரம் மதிப்புள்ள இக்கருவிகள் பயிற்சி பெறுவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. விருப்பமுள்ளவர்கள் இப்பயிற்சி பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின் போது வேளாண் அறிவியியல் மைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் திரு.டி.சுந்தர் ராஜ், திட்ட உதவியாளர் ( வேளாண்மை பொறியியல் ) திரு.எஸ்.முகமது இஸ்மாயில், தொழில்நுட்ப வல்லுநர் ( வேளாண்மை விரிவாக்கம்) திரு.எஸ்.செந்தில்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர் ஆகியோர் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.